Chundikuli Branch Library

Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

## வைத்தியர் பற்றாக்குறையை நீக்க வெளிநாட்டு மருத்துவ குழுக்கள்

ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழுவினர் மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளனர். பல்வேறு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட மருத்துவ நிபுணர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளன. இம் மருத்துவ நிபுணர்களைக் கொண்ட குழுக்கள் சுழற்சி முறையில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளன. இக்குழுக்கள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சில காலம் இலங்கையில் தங்கியிருந்து மருத்துவ சேவையை வழங்கும். இலங்கையில் நிலவிவரும் மருத்துவ நிபுணர்களுக்கான பற்றாக்குறையை நீக்கும் பொருட்டு மேற்படி நிழ்ச்சித் திட்டம் அமைய உள்ளது. இம்மருத்துவ நிபுணர் குழுக்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று கடமையாற்றுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க), (நி)

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | ஐப்பசி 01 | [17-10-1993] | ஞாயிற்றுக்கிழமை | ஓசை 241

# யுத்தம் மூலமே பிரச்சினை தீர்க்க முடியும்; பெரும் தாக்குதலுக்கு தயாராகி வருகிறோம்!

## மூன்று போராளிகள் வீரச்சாவு

யாழ். மாவட்டத்தில்கடந்த 14-ம் திகதி வியாழனன்று இடம்பெற்ற விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி கப்டன்பைரவன் (சந்திரகாந்தன்வாகீசன், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு) வீரச்சாவடைந்தார்.

பூநகரிப் பகுதியில் கடந்த மூனறாம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிறிலங்காஇராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் கப்டன் அருளரசன் (கணேசன் கருணாநிதி வன்னியார் வீதி, களுதாவளை-01, களுவாஞ்சிக்குடி மட்டக்களப்பு) எனும் விடுதலைப்புலிகள் போராளி வீரச்சாவடைந்தார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று முன் தினம் காலை 9 10 மணியளவில் சுகவீனம் காரணமாக வீரவேங்கை கணேஸ் (அந்தோனிப்பிள்ளை ஆனந்தராசா, இல 27, லேக் வீதி, 3-ம் வட்டாரம், மட்டக்களப்பு) என்னும் விடுதலைப் புலிகள் போராளி வீரச்சாவடைந்தார்.

இம் மூன்று போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் பைரவன்



கப்டன் அருளரசன்



வீரவேங்கை கணேஸ்

## ராணுவ தளபதி சிசில் தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் இதுவரை நடைபெற்றுள்ள இராணுவ நடவடிக்கைகளில் "யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையே மிகப் பெரியது. இவ்வாறான பாரிய இராணுவ நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணலாம். ஆகையினால் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை போன்று பல தாக்குதல் திட்டங்களை விரைவில் நடத்த திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு சிறிலங்கா இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரெட்னா தெரிவித்துள்ளார்.**

'திவயின' பத்திரிகைக்கு யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தொடர்பாக அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், தொடர்ந்து யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு உண்மையான தீர்வை காண முடியும். இதில் எந்த சந்தேகமும் இல்லை கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் கையோங்கியுள்ளது. எனவே தான் நாம் யாழ்தேவி நடவடிக்கையின்போது கணிசமான படையினரைப் பயன்படுத்தக் கூடியதாக அமைந்தது.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் இராணுவத்தை விட்டு ஓடியவர்களில் கணிசமானவர்கள் 'யாழ்தேவி' இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து மீண்டும் இராணுவத்தில் இணைகின்றனர் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும். கிளாலியில் நடந்த சமர்போல் தொடர்ந்து நடாத்தினால் விடுதலைப் புலிகளின் கோட்டையான யாழ்ப்பாணத்தைப் பிடிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

யாழ்தேவி நடவடிக்கையை தொடர்ந்து பல இராணுவ நடவடிக்கைகள் நடத்த திட்டமிட்டுள்ளோம். எதிர்வரும் காலத்தில் மிகவிரைவில் இந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை எல்லைப் புறத்தில் பாரிய படை நடவடிக்கை

(திருமலை)

திருக்கோணமலை - மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப்பகுதி காட்டுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்

நேற்றுக்காலை ஆரம்பமான இந்நடவடிக்கையை வழிப்படுத்தசிறிலங்காஇராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா, கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம், திருமலை இராணுவ தளபதி பிரிகேடியர் சிறில் பீரிஸ் ஆகியோர் திருமலையில் தங்கியுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் சுற்றிவளைப்பு, தேடுதல்; ஒரே நாளில் 500 தமிழ் இளைஞர்கள் கைது

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

## அரசியல் விரிவுரையாளராக அநுரா அமெரிக்கா செல்வார்

(கொழும்பு)

ஐ. தே. கவில் இணையலாம்



கப்டன் பைரவன்



கப்டன் அருளரசன்



வீரவேங்கை கணேஸ்

'திவயின' பத்திரிகைக்கு யாழ்தேவி இராணுவ நடவடிக்கை தொடர்பாக அளித்த பேட்டியில் மேற்படி கருத்தை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், தொடர்ந்து யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவதன் மூலம் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு உண்மையான தீர்வை காண முடியும். இதில் எந்த சந்தேகமும் இல்லை கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தின் கையோங்கியுள்ளது. எனவே தான் நாம் யாழ்தேவி நடவடிக்கையின்போது கணிசமான படையினரைப் பயன்படுத்தக் கூடியதாக அமைந்தது.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் இராணுவத்தை விட்டு ஓடியவர்களில் கணிசமானவர்கள் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையை தொடர்ந்து மீண்டும் இராணுவத்தில் இணைகின்றனர் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படும். கிளாலியில் நடந்த சமர்போல் தொடர்ந்து நடாத்தினால் விடுதலைப் புலிகளின் கோட்டையான யாழ்ப்பாணத்தைப் பிடிக்கலாம் எனவும் தெரிவித்தார்.

யாழ்தேவி நடவடிக்கையை தொடர்ந்து பல இராணுவ நடவடிக்கைகள் நடத்த திட்டமிட்டுள்ளோம். எதிர்வரும் காலத்தில் மிக விரைவில் இந்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை எல்லைப் புறத்தில் பாரிய படை நடவடிக்கை

(திருமலை)

திருக்கோணமலை - மட்டக்களப்பு - பொலநறுவை எல்லைப்பகுதி காட்டுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்

நேற்றுக்காலை ஆரம்பமான இந்நடவடிக்கையை வழிப்படுத்தசிறிலங்காஇராணுவத் தளபதி சிசில் வைத்தியரெட்னா, கிழக்கு பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லக்கி அல்கம், திருமலை இராணுவ தளபதி பிரிகேடியர் சிறில் பீரிஸ் ஆகியோர் திருமலையில் தங்கியுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் இராணுவ நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன்தினம் இரவு 8-00 மணியளவில் பொன்னாலை கொத்தத்துறைப் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர்.

இவ் எறிகணைகள் அப்பகுதிகளிலுள்ள மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த இடங்களில் வீழ்ந்து வெடித்தன. மேலும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் அடிக்கடி கேட்டவண்ணம் இருந்தன. (41)

## மிதிவெடியில் காலிழந்தனர்

[கொழும்பு]

பொலநறுவவில் விடுதலைப் புலிகளின் மிதிவெடியில் சிக்கிய இரண்டு இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர். இவ்வாறு கால்களை இழந்த இருவரும்அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

லாண்ட்ஸ் கோப்ரல் டி.எச். ஹெட்டியாராச்சி, வை. எச். நயனகாந்த எனும் இரு படையினரே இவ்வாறு கால்களை இழந்தவராவர்.

## அமெரிக்க அதிகாரிகளுடன் பிரதமர் ரணில் பேச்சு

(வாஷிங்டன்)

சிறிலங்காவில்தற்போதைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டனில் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ரணில் விக்கிரமசிங்க தற்போது வாஷிங்டன் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உலக வங்கியின் தலைவரையும் அவர் சந்தித்துப் பேசியுள்ளார்.

அமெரிக்க அரசின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அன்ரனி லேக் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜோன்பரோ, அமெரிக்க வெளிவிவகார குழு பிரதிநிதிகள் ஆகியோரையும் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்து பேச்சு நடத்தினார்.

## அரசியல் விரிவுரையாளராக அநுரா அமெரிக்கா செல்வார்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியிலிருந்து இராஜினாமா செய்துள்ள அநுரா பண்டாரநாயக்கா அமெரிக்கா செல்லவுள்ளார். அங்கு அவர் பகுதி நேரமாக அரசியல் விரிவுரைகளை நடத்த தீர்மானித்துள்ளாராம்,

முன்னதாக அநுரா ஆளும் ஐ. தே. கவில் இணையலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப் பட்டது. இதேவேளை அநுராவின் திடீர் இராஜினாமா தமக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என அநுராவின் கட்சி சகாக்கள் தெரிவித்துள்ளனர்.

## எதிர்காலம் குறித்த முடிவு எதுவும் இல்லை

### அநுரா தெரிவி பு

(கொழும்பு)

''எனது எதிர்கால நடவடிக்கை தொடர்பாக இது வரை எதுவித முடிவையும் நான் எடுக்கவில்லைஇன்றைய நிலையில் இது குறித்து முடிவெடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன்'' என் அநுரா பண்டாரநாயக்க நேற்று சந் தேசிய வானொலிக்கு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர்கருத்துத் தெரிவிக்கையில், ''கட்சியின் விதிகளை மீறிய பல உறுப்பினர்கள் இன்னும் கட்சியில் இருக்கின்றனர் இருந்தும் என் மீது மட்டும் கட்சி இடைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புகைப்படக் கண்காட்சி நேற்று மானிப்பாயில்திறப்பு

(தொல்புரம்)

மானிப்பாயில் மாபெரும் புகைப்படக் கண்காட்சி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 9 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் வலிகாமம் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி. எழிற்கொடி அவர்கள் தலைமையில் ஆரம்பமாகிய இந் நிகழ்வின்போது மங்கள விளக்கினை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு. ந. இன்பன், மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். கேசவராசா ஆகியோர் ஏற்றி

(4ஆம் பக்கம் பார்க்க)

## 'யாழ்தேவி' நடவடிக்கையில் காயமடைந்தவர் மரணம்

(கொழும்பு)

யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் போது காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த இராணுவ அதிகாரி ஒருவர் மரணமானார்.

துப்பாக்கிச் சூட்டு காயத்துக்கு உள்ளாகியிருந்த சிங்க படையணியைச் சேர்ந்த மேஜர் ஜகத்சினி அமுனெகொட (வயது 32) என்னும் இவர் பாகிஸ்தானில் விசேட பயிற்சி பெற்றவர் எனக் கூறப் படுகிறது.

# கொழும்பில் சுற்றிவளைப்பு, தேடுதல்; ஒரேநாளில் 500 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இராணுவத்தினரும் பொலிசாரும் இணைந்து நடத்திய தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சுமார் 500 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்விளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். நேற்று கைதான இந்த 500 தமிழ் இளைஞர்களும் பத்து தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

முகத்துவாரம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன் தற்கொலைப் படையைச் சேர்ந்தவரின் அங்கி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தும் பின்னர் நேற்று முன் தினம் அப்பகுதியில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்தும் கைதுகள் தீவிரமாகியிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் சிறியளவில் தினமும் நடைபெற்ற கைது நடவடிக்கை நேற்று தீவிரமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. கொழும்பு நகரத்தின் பல பகுதிகள் வட்டாரம் வட்டாரமாக சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த புதன் கிழமை இரவு கொச்சிக்கடைப் பகுதியை பொலிசாரும் முப்படையினரும் சுற்றிவளைத்தனர். புனித அந்தோனியார் வீதி, ஜம்பட்டா வீதி, கொட்டகேனப் பொலிஸ் நிலையப்பகுதி விவேகானந்தா மேடு ஆகிய பகுதிகள் இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டது. இரவு 8. 30மணிமுதல் அதிகாலை 1. 00 மணிவரை இத் தேடுதல் முயற்சி தொடர்ந்தது மேசையில் இலாச்சிகளிற்குள் கூட படையினர் தீவிர தேடுதலை நடாத்தினர். இத் தேடுகலின்போது பல தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டதாக தெரியவருகிறது.

இத் தேடுதல் ஏனைய பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது.

## வவுனியா செல்ல முயன்ற 150 பயணிகளுக்கு தடை

(வவுனியா)

நேற்று முன்தினம்வவுனியா நகருக்குச் செல்ல முயன்ற சுமார் 150 பயணிகள் இராணுவத்தால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தாண்டிக்குளம் முகாமினூடாக பிரவேசிக்க முயன்ற இப்பயணிகளை நகருக்குள் செல்லவிடாது ராணுவம் திருப்பி அனுப்பியது

இதனால் இவர்கள் பயணத்தை இடைநடுவில் கைவிட்டு திரும்பிவர நேர்ந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கடந்த சில நாட்களாக வவுனியாவில் தமிழ் பயணிகள் மீதான இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை வவுனியா நகருக்குள் சென்ற தமிழ் பயணிகள் சுமார் 100 பேர் தீவிர விசாரணைக்குட் படுத்தப்பட்டனர்.

பேயாடி கூளாங்குழத்தில் இருந்து மேற்படி 100 பயணிகளும் இராணுவ வகானங்களில் ஏற்றப்பட்டு தாண்டிக்குள இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு இவர்கள் தீவிரமாக விசாரிக்கப்பட்டனர். பின்னர் இவர்கள் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

## பிரேமாவை கொல்ல 10 தற்கொலைப் படையினர்

### ஐலண்ட் டத்திரிகை தகவல்

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவை வெடிகுண்டு மூலம் தற்கொலைப்படை வீரர் கொலைசெய்ய தவறின் பிரேமதாசாவை கொல்ல மேலும் 9 தற்கொலைப்படையினர் காத்திருந்ததாக ஐலண்ட் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 9பேரும் முதலாமவர் சிலவேளை பிரேமதாசாவை கொல்லமுடியாமல் போகும் பட்சத்தில் ஜனாதிபதியை சுற்றிவளைத்து கொல்வதற்கு தமது உடலில் வெடிகுண்டை பொருத்திக்கொண்டு மேதினப் பேரணியில் கலந்து கொண்டிருந்ததாக ஐலண்ட் மேலும் தெரிவித்துள்ளது.

எனினும்முதலாமவரேஜனாதிபதியை தற்கொலை தாக்குதல் மூலம் வெற்றிகரமாக கொன்றுவிட்டதால் ஏனைய 9 பேரும் தலைமறைவாகி விட்டதாகவும் இவர்களில் ஒருவரின் வெடிகுண்டுபொருத்தப்பட்ட அங்கியே அண்மையில் முகத்துவார கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகத்துவாரம் பகுதியில் தமிழ்க் குடும்பம் கைது

### ஆயுதங்களை மறைத்து வைத்திருந்தனராம்

[கொழும்பு]

முகத்துவாரத்திலுள்ள வீடு ஒன்றிலிருந்து பொலிசார் ஆயுதங்கள் சிலவற்றை கைப்பற்றியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இந்த ஆயுதங்களுக்கும் அண்மையில் முகத்துவாரம் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலைப் படை வீரரின் குண்டுகள் பொருத்தப்பட்ட அங்கிக்கும் தொடர்பு இருப்பதாக பொலிசார் ஊகம் தெரிவித்தனர்.

முகத்துவாரத்திலுள்ள சென்ஜேம்ஸ் பகுதியில் தமிழ்க் குடும்பம் ஒன்று வசித்த வீட்டில் இந்த ஆயுதங்கள் நிலத்திற்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது வீட்டிலுள்ளோர் விசாரணையின் பொருட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரி - 56 துப்பாக்கி, கைக்குண்டுகள் - 7, 80 மி.மி செக்கோஸ்லவாக்கிய கைத் துப்பாக்கி என்பன கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இப் பகுதியில் பொலி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மிருதங்கம்**

இரண்டுநாட்களுக்குள் தோல் வாத்தியங்கள் யாவும் சுத்த மாக சாதம் போட்டு தரப் படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார் பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

(6278)

**விற்பனைக்கு**

LUMALA BOYS பைசிக்கிள் நல்ல நிலையில் விற்பனைக் குண்டு. நேரில் பார்வையிட லாம். 35/3, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (6281)

**''நீமியா உரம்''**

மாரி காலம் வந்தது. நாம் பயிர் நடுகை செய்யணும். மரக்கன்று நடவேணும் அடிக் கட்டு உரமாக ''நீமியா உரம்' பாவித்தால் மண்ணின் வளம் பெருகிடும், பூச்சி புழுக்கள் ஒழிந்திடும். பக்கற் ஒன்று ரூபா. 17/- 20 கிலோ கொண்ட பொதி ரூ. 300/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் நீமியா உரம் கிடைக்கிறது. ''மில்க்வைற்''

(சி 7597)

**பெயர் மாற்றம்**

யாழ். மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் 6ஆம் ஆண்டில் பயிலும் எமது புத்திரனின் பெயரான A. லக்ஷ்மன் ஜூல் என்பதை A. லக்ஷ்மன் (A. LUCKSMAN) என்று மாற்றம் செய்துள்ளதாக அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன். செ. அந்தோனிப்பிள்ளை, (தகப்பன்) மெமோறியல் லேன், மானிப்பாய்.

★

யாழ்/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் 4-ம் ஆண்டில் பயிலும் எமது புத்திரனின் பெயரான A அன்ரன் றேமன் என்பதை A. பிரசாந் (A. PRASANTH) என்று மாற்றம் செய்துள்ளதாகஅறிவித்துகொள்ள விரும்புகிறேன். செ. அந்தோனிப் பிள்ளை, (தகப்பன்) மெமோறியல் லேன், மானிப்பாய்.

(சி-7721)

**தவறிவிட்டது**

கடந்த புதன் அன்று யாழ்ப் பாணத்திற்கும் இணுவிலுக் கும் இடையில் (கே. கே. எஸ். வீதி) நவரத்தினம் டினோசன் என்பவரின் கைச்சங்கிலி தவற விடப்பட்டது இதைக் கண்டு எடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப் [illegible]

# இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

இலக்கியப் பேரவையின் சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழா இன்று காலை ஒன்பது மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ் இலக்கிய வட்டத் தலைவர் து. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் இலக்கிய ஆய்வுக்கான பரிசு கலாநிதி இ பாலசுந்தரம் அவர்களுக்கும், நாவலுக்கானபரிசு செங்கைஆழியான் அவர்களுக்கும், சிறுகதை தொகுதிக்கான பரிசு க. சட்டநாதன் அவர்களுக்கும் கவிதைத் தொகுதிக்கான பரிசு மு வே யோ. வாஞ்சிநாதன் அவர்களுக்கும், சிறுவர் இலக்கியத்திற்கான பரிசு வ. இராசையா அவர்களுக்கும் சமய இலக்கியத்திற்கான பரிசு கலாநிதி நா. ஞானகுமாரனுக்கும், நாடகத்திற்கான பரிசு கலைப் பேரரசு ஏ ரி. பொன்னுத்துரைக்கும், அறிவியலுக்கான பரிசு அநு. வை. நாகராசனுக்கும்வழங்கப்படவுள்ளன. அத்துடன் மூத்த எழுத்தாளரான பிரம்ம சிறிபஞ்சாட்சர சர்மா அவர்களை கௌரவித்து வரதர் மற்றும் புத்தொளி ஆகியோரின் உரைகளும் இடம்பெறவுள்ளன.

---

**யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**

## வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம்

## 14. 11. 1993

மேற்படி கூட்டம் 1993 11 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சமாசத் தலைவர் திரு ச. முருகனேசன் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தல் அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்தும் சமாசத்துடன் தொடர்பில்லாமலும் இருக்கும் அங்கத்துவ சங்கங்கள் கூட்ட அறிவித்தலையும், பொதுச்சபை பிரதிநிதிக்கான அதிகாரக்கடிதத்தையும் சமாச காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி

182 1/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

பதில் மாவட்டச் செயலாளர், யாழ். மா சி. க. கூ. ச. சமாசம்.

[சி 7719]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

**கந்தர் பொன்னம்பலம்**

[வெள்ளையப்பா]

17. 10. 93 (இன்று) நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரிகையிலும், மதிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தனார்கோயிலடி, கரணவாய் தெற்கு, காவெட்டி. - குடும்பத்தினர்.

(6207)

---

க. பொ. த (சா/த)

# 30,000 பரீட்சார்த்திகள் யாழ். மாவட்டத்தில் தோற்றுவர்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் டிசம்பர் மாதம் ஆறாம் திகதி தொடக்கம் நடைபெறவிருக்கின்ற க. பொ. த (சா/தர) பரீட்சைக்கு யாழ் மாவட்டத்தில் சுமார் முப்பதினாயிரத்திற்கும் மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். யாழ் மாவட்டத்தில் அமையவுள்ள 196 பரீட்சை நிலையங்களில் 17 ஆயிரம் பாடசாலைப்பரீட்சார்த்திகள் மற்றும் 13 ஆயிரம் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது இதில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து சுமார் 96 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர் என யாழ் கல்வித் திணைக்களவட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் இப் பரீட்சைக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் இருந்தும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இருந்தும் அதிகப்படியான மாணவர்கள் தோற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)'(நி)

# பாலர் கல்வி அபிவிருத்திக்கு ஒருங்கிணைப்புக்குழு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் பாலர் கல்வியினை வளர்க்கும் நோக்குடன் பாலர் கல்வி விருத்துக்கான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

யாழ்மாவட்டத்தில் செயற்படும் பாலர் கல்வியுடன் தொடர்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை அங்கத்தவர்களாகக் கொண்டதாக இந்த ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது

யாழ்மாவட்டத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாலர் கல்வி அபிவிருத்தி பயிற்சித்திட்டங்கள் மற்றும் பாலர் கல்வியுடன் தொடர்புடைய சகல விடயங்களிலும் இவ் ஒருங்கிணைப்புக் குழு கவனம் செலுத்தும்.

பாலர் கல்வியுடன் தொடர்புடைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட கூட்டத்தின்போது மேற்படி ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டது.

சுமார் 11 அங்கத்தவர்களைக் கொண்ட இவ் ஒருங்கிணைப்புக்குழுவுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மிடையிலான இணைப்பாளராக திரு பாலகிருஷ்ணன் செயற்படுவரார்.

இவ் ஒருங்கிணைப்புக் குழுவின் முதற்கட்ட செயற்பாடாக யாழ். மாவட்டம்முழுவதிலும் இயங்கி வரும் பாலர் கல்வி நிறுவனங்கள் மூலமாக தகவல் திரட்டும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனபாலர்கல்விக்கான பாடத்திட்டம் பற்றியும் பாலர் கல்வி ஆசிரியர்களின் விபரம் பற்றியும் மற்றும் இவ் ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டம் தொடர்பாகவும் பாலர் கல்வி நிறுவனங்கள் தற்போது எதிர் கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தகவல்கள் திரட்டப்படவிருக்கின்றன. (க) (ச)

**ஆதாரம் காட்டி பெறவும்**

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு 8 ம் வட்டாரத்தைச் சேர்ந்த தியாகராசா சச்சிதானந்தம் என்பவரது பங்கீட்டு அட்டையும் உலர் உணவு முத்திரையும் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (88)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



---

**மாபெரும் புகைப்படக்**

# கண்காட்சி

எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றுச் சம்பவங்களைச் சித்திரிக்கும் நிகழ்வு

**17.10.1993 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 9.00 மணி**

இடம்: மானிப்பாய் இந்துக்கல்லூரி

❀ கண்காட்சி பார்வையிடும் நிகழ்விற்கு அனுமதிக்கப்படும்

17. 10. 1993 ஞாயிற்றுக்கிழமை மாலை

❀ தலைமை: திரு இதயன் (பொறுப்பாளர், மாணவர் அமைப்பு வலிகாமம்)

❀ ஈகச்சுடர்ஏற்றல்:- 1) திருமதிபசுபதிப்பிள்ளை (அதிபர், மானிப்பாய் மகளிர் கல்லூரி)

2) திரு. அ. மு அருணாசலம் (அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

வரவேற்புரை: திரு. . செழியன் (பொறுப்பாளர், மாணவர் அமைப்பு மருதனார்மடம்)

சிறப்புரை: 1. திரு. அ. மு. அருணாசலம் அதிபர், மானிப்பாய் மெமோறியல் ஆங். பாடசாலை)

2. திரு. சி. இளம்பரிதி (பொறுப்பாளர், அரசியல்துறை. யாழ். மாவட்டம்)

நன்றியுரை: செல்வி கஜனி [பொறுப்பாளர், மாணவர் அமைப்பு யாழ். கல்விக்கோட்டம்]

தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

**அன்பளிப்பு: 5/-, 10/.**

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

(சி-7222)

---

# நினைவு கூருகின்றோம்... 1993-10-17

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - தம்பிலுவில் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நந்தன்** (செ குலசிங்கம் - காரைதீவு - அம்பாறை)

யாழ் - சண்டிலிப்பாய் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கனகசபை** (ஆறுமுகம் பாக்கியராசா - சங்கானை மேற்கு - யாழ்)

யாழ் - கல்லுண்டாய் வெளியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தென்றல் / கோணேஸ்** (வல்லிபுரம் கணேஸ்வரன் - மாவிட்டபுரம் - யாழ்)

மல்லாகம், கோப்பாய் பகுதிகளில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

மெமோறியல் லேன், மானிப்பாய்.

★

யாழ்/மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் 4-ம் ஆண்டில் பயிலும் எமது புத்திரனின் பெயரான A அன்ரன் றேமன் என்பதை A. பிரசாந் (A. PRASANTH) என்று மாற்றம் செய்துள்ளதாகஅறிவித்துகொள்ள விரும்புகிறேன். செ. அந்தோனிப்பிள்ளை, (தகப்பன்) மெமோறியல் லேன், மானிப்பாய். (சி-7721)

## தவறிவிட்டது

கடந்த புதன் அன்று யாழ்ப்பாணத்திற்கும் இணுவிலுக்கும் இடையில் (கே. கே. எஸ். வீதி) நவரத்தினம் டினோசன் என்பவரின் கைச்சங்கிலி தவறவிடப்பட்டது இதைக் கண்டு எடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழக்கப்படும். (6310)

கடந்த 12-10-93 இரவு 11-30 மணியளவில் பூநகரி—யாழ். பயணத் தொடக்கத்தில் சிவஞானம் பரமநாதன் ஆகிய எனது பேஸ்சினை தவறவிட்டுவிட்டேன், அதனுள் அடையாள அட்டை இல. 363190154V, அனுமதி அட்டை, பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் இருந்தன. இதைக் கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6311)

## இலக்கிய அரங்கு


நல்லை தமிழ் சங்கத்தின் இரண்டாவது இலக்கிய அரங்கம் புதிய செம்மணி வீதியில் உள்ள இருபாலை தெற்கு இல்லத்தில் இன்று மாலை 3 00 மணிக்கு நடைபெறும்.

கவி அரங்கு, கருத்தரங்கு என்பவற்றுடன் கலைஞர்கள் கலந்துரையாடலும் இடம் பெறும்.

## பெண்களும் சுகாதாரமும் கருத்தரங்கு

பெண்களும், சுகாதாரமும் என்னும் பொருள் பற்றியதொரு கருத்தரங்கை உரும்பராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் இயங்கும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் முன்வந்துள்ளது. இந்த நிகழ்வில் வளர்மதி சனசமூக நிலைய அங்கத்தவர்களும், அப்பகுதியின் இளம் யுவதிகள் தாய்மார்களும் பங்குபற்றவுள்ளனர். இன்று ஞாயிறு நடைபெறவிருக்கும் இக் கருத்தரங்கில் உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிவகலாலா, டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன், டாக்டர் சிறிகாந்தா, சரோஜா சிவச்சந்திரன் நவநீதம் ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## கந்தர் பொன்னம்பலம்

[வெள்ளையப்பா]

17. 10. 93 (இன்று) நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரிகையிலும், மதிய உணவிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தனார்கோயிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

- குடும்பத்தினர்.

(6307)

# 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் கனகசபை

(ஆறுமுகம் பாக்கியராசா)

[சண்டிலிப்பாயில் இந்திய இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்தார்.]

மலர்வு:— 29. 01. 1967

வீரச்சாவு:- 17. 10. 1987

தமிழீழ வரைபடத்தை
உங்கள் குருதியால் வரைந்து
வரித்துக் கொண்ட இலட்சியத்திற்காய்
உண்மை விடுதலைக்காய்
உயிரை உவந்தளித்த தியாகத்தின்
விளக்கக் குறியீடுகள் நீங்கள்
எங்கள் தேச விடுதலைக்காய்
உங்கள் தேகம் சல்லடையாகியது.

கனகசபை வீதி,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்.

(6302)

நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கூட்டத்தின்போது மேற்படி ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டது.

சுமார் 11 அங்கத்தவர்களைக் கொண்ட இவ் ஒருங்கிணைப்புக்குழுவுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமிடையிலான இணைப்பாள

...ரத்தைச் சேர்ந்த தியாகராசா சச்சிதானந்தம் என்பவரது பங்கீட்டு அட்டையும் உலர் உணவு முத்திரையும் வீதியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (88)

# 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## முருகேசு பகீரதன்

(ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவனும், பரியோவான் முதலுதவிச் சங்க நிறைவேற்று உத்தியோகத்தரும், சாரணர் ஆசிரியரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினரும்.)

மலர்வு: 27. 12. 1972

உதிர்வு: 17. 09. 1993

குடும்பத்தின் குல விளக்காய்
குவலயத்தில் வந்துதித்தாய்
அன்பின் திருவுருவாய்
அவனியில் வாழ்ந்து வந்தாய்
இன்பத்தைக் காட்டி நின்றாய்
இதயத்தைப் பிழிகின்றாய்
துன்பத்தில் எமைவிட்டு
தூரத்தில் ஓடி விட்டாய்

### நன்றி நவிலல்

அன்னாருக்கு வைத்தியம் மற்றும் வகைகளில் உதவி புரிந்த யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர்கள் ஏனைய ஊழியர்கள் இறுதிச்சடங்கின் போது பல வகைகளிலும் உதவி புரிந்தோர் அஞ்சலி செலுத்தியோர் இரங்கல் செய்தி அனுப்பியோர் மலர்வளையம் இட்டோர் எமது துக்கத்தில் பங்குபற்றிய அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தம்பசிட்டி,
பருத்தித்துறை.

(சி-6308)

- குடும்பத்தினர்

# நினைவு கூருகின்றோம்... 1993-10-17

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் அம்பாறை - தம்பிலுவில் பகுதியில இந்தியப் படையினருடனான சமரில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நந்தன்** (செ குலசிங்கம் - காரைதீவு - அம்பாறை)

யாழ் - சண்டிலிப்பாய் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் கனகசபை** (ஆறுமுகம் பாக்கியராசா -சங்கானை மேற்கு - யாழ்)

யாழ் - கல்லுண்டாய் வெளியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தென்றல் / கோணேஸ்** (வல்லிபுரம் கணேஸ்வரன் - மாவிட்டபுரம் - யாழ்)

மல்லாகம், கோப்பாய் பகுதிகளில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 02 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு இந்தியப் படையினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய -

**சசி** (பொ. சசிகரன் - பெரியகல்லாறு - மட்டு)

திருமலை - மூதூர்ப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**டானியல்** (இராசநாயகம் கௌரிநாதன் - காரைதீவு-02 - அம்பாறை)

யாழ் - சித்தன்கேணி, இலுப்பையடிப் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய -

**லெப. அருண் / பிறேம்** (நடராசா பிறேமச்சந்திரன் - சங்குவேலி - மானிப்பாய் -யாழ்)

அம்பாறை, மங்களஓயாப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 02 சிறுவர்கள் உட்பட 5 தமிழர்கள்.

யாழ் - இளவாலையில் சிற்றூர்தி ஒன்றில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு இராணுவ முகாமில்வைத்து கொலை செய்யப்பட்ட மாரீசன்கூடலைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு முல்லைத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்து வைத்திருந்த மிதிவெடிகளை அகற்றும்போதுமிதிவெடி வெடித்ததில் வீரச்சாவெய்திய -

**பானு** (அருளம்பலம் ரவிச்சந்திரன் - மணலாறு - முல்லைத்தீவு)

வசாவிளானில் சிறிலங்கா இராணுவத்தினரின் ''ஒப்பரேசன் ஜெயசக்தி'' நடவடிக்கையின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**விக்ரர்** (கமலமுத்து பத்மநாதன் - உடப்பு - புத்தளம்)

**லெப். ரசிக** (சிறிபாலசுப்பிரமணியம் அன்பழகன் - தெல்லண்டை, பருத்தித்துறை . யாழ்)

**லெப். செல்வம்** (சிவப்பிரகாசம் ரமேஸ்குமார் - தம்பசிட்டி, பருத்தித்துறை - யாழ்)

**லெப் டானியல்** (கிருஸ்ணபிள்ளை நகுலேஸ்வரன் - மூளாய் மேற்கு, சுழிபுரம் - யாழ்)

**2 ம் லெப். ஐயர் / ராஜ்** (பாலசுப்பிரமணியசர்மா சுந்தரராஜசர்மா - புத்தூர் மேற்கு - யாழ்)

**செல்டன்** (யேசுதாசன் அன்ரனியுனைட் - நாவாந்துறை- யாழ்)

**நசார்** (விஜயரட்ணம் சுதாகரன் பெரியவிளான், இளவாலை - யாழ்)

பலாலி முகாமிலிருந்து சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 02 தமிழர்கள்.

வவுனியாவில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்து அடித்துக் கொல்லப்பட்ட வவுனியா கந்தசாமி கோவிலடியைச் சேர்ந்த தமிழிளைஞன்

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/7716)

Chandikuli Branch Library

சிந்தனைக்கு

அரைமணி நேரத்தை அற்பமாக கருதுவதை க ட்டிலும், அந்த அரை மணி நேரத்திலும் மிக அற்புதமான காரியத்தை செய்துகொண்டிருப்பது மேல்.

— யொஹன் கேத்தே

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 17-10-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த பெ. எண் - 05

# போராட அணி திரள்வோம்

சிங்கள இராணுவம் தொடர்ச்சியான தோல்விகள், பாரிய இழப்புக்கள் என்பனவற்றின் பின்னரும், யுத்தத்தைத் தொடரவே விரும்புகின்றது. இந்நிலையானது எவ்வாறேனும் இராணுவ வெற்றியை ஈட்டிவிடுவதென்ற நோக்கில் இருந்து அரசாங்கம் இன்னமும் மாறவில்லை என்பதையே காட்டுகின்றது.

இதனை வெளிக்காட்டுமாப் போலவே, சிங்கள இராணுவத்தின் படையணிகளின் பெருக்கங்களும், புதிய தாக்குதல் திட்டங்களும் உள்ளன. மண்கிண்டிமலை இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ச்சிகண்ட பின்னர் பத்து படையணிகளை 10,000 பேர்- உருவாக்க அரசாங்கம் அனுமதி அளித்தது. தற்பொழுது யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் பின் மேலும் ஐந்து படையணிகளை உருவாக்க இராணுவத் தளபதி அரசிடம் நிதி உதவி கோரியுள்ளார்.

அதாவது, இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு தான் என்பதில் அரசாங்கம் முடிந்த முடிவாய் உள்ளது. இந்நிலையில், தமிழ் மக்களின் நிலை என்ன என்பதே கேள்வியாகும். அதாவது, தமிழ் மக்கள் அனைவரும் தமது பாதுகாப்பிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடுவதா? அன்றி சிங்கள இராணுவத்திடம் தலைமுறை தலைமுறையாக அடிமைகளாக வாழ்வதா? என்பதே அது ஆகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று ஒரு தர்க்க பூர்வமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. சாத்வீக முறையில் ஆரம்பித்த இப்போராட்டம் இன்று சிங்கள இராணுவத்தின் பாரிய படை எடுப்புக்களை தடுத்து நிறுத்தும் அளவிற்குப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அத்தோடு தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது.

இந்நிலையானது, இலகுவில் எட்டப்பட்டதொன்றல்ல, ஆயிரக் கணக்கான போராளிகளின் தியாகத்தினாலும், பல்லாயிரக்கணக்கான மக்களின் அர்ப்பணிப்புக்களாலும் அடையப்பட்டதொன்று. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இதுவரை 600க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் தமதுயிரை தற்கொடை செய்துள்ளார்கள். 40,000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதத்தின் இன வெறிக்குப் பலியாகியுள்ளனர், பல்லாயிரம் கோடி ரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

# சிங்களவர் நிலத்தை பாதுகாக்க துட்டகைமுனுக்கள் வேண்டும் !

## உருகம விமலசிறிதேரோ கருத்து

(கொழும்பு)

சிங்களவர்களின் நிலத்தைப் பாதுகாக்கவும், பௌத்த தர்மத்தைப் பாதுகாக்கவும் சிங்கள இனத்தைப் பாதுகாக்கவும் ஒரே வழி சிறிலங்காவை பிளவுபடாமல் பாதுகாப்பது மட்டுமே ஆகும் என்று பௌத்த மதகுரு உடுகம விமலசிறி தேரோ ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள பயங்கரவாத நடவடிக்கைகள் இந்த ஆண்டு முடிவுக்கு முன்பாக முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்றும், படையினருக்கு வெற்றிகள் கிட்டும் வேளைகளில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுவதால் எதிரிகள் பலமடைகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். அத்துடன் பேச்சுவார்த்தைகள் முடிவுற்ற பின்னர் மீண்டும் எம்மை அவர்கள் தாக்குகின்றனர். எனவே நாம் மிகுந்த அவதானத்துடன் எமது சிறிலங்காவைக் காப்பாற்ற வேண்டும்.

இன்று துட்டகைமுனு, விஜயபாகு, பராக்கிரமபாகு அநாகரிக தர்மபாலா போன்றோர் ஆயிரக்கணக்கில் குவிய வேண்டும். சிங்கள இனத்தை இன்று காப்பாற்ற தவறுவோமாயின் எமது சகல உரிமைகளையும் விரைவில் இழந்து விடுவோம். புலிகள் பலம் பெற்றுவிட்டால் சிங்களவர்களின் இரத்தம் உறிஞ்சப்பட்டு விடும் பழைய அரசர்கள் யுத்தத்தில் வெற்றியீட்டிய முறைகள் சரித்திரத்தில் உள்ளன. இதேபோல் நமது அரசாங்கமும் இன்று யுத்தத்தில் வெல்வதற்குரிய வழிமுறைகளை வகுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்,

# யுத்தத்தில் இறப்பவர்கள் ஏழை சிங்கள இளைஞரே

## சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு யுத்தத்தில் இறப்பவர்கள் ஏழைப் படையினரே என சிறிலங்கா மேல் மாகாணசபை முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர் அதிகாரத்தில் அமரவே படையினர் இறக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். ஆட்சியாளர் தாம் ஆட்சியில் இருப்பதற்காக இப்போரைத் தொடர்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்குபிரச்சினைக்கு துப்பாக்கியினால் தீர்வு வராது

## — பிரதமர் ரணில் விக்கிரமசிங்க

[கொழும்பு]

வடக்கு, கிழக்கு பகுதியிலுள்ள பிரச்சினைகளுக்கு துப்பாக்கியினால் பதில் சொல்ல முடியாது. துப்பாக்கியினால் பாதுகாக்க மட்டும் முடியுமே தவிர தீர்க்க முடியாது என்பதை அனைவரும் உணர வேண்டும். ஜனநாயக முறையில் பிரச்சினைகளுக்கான தீர்வை பேச்சுவார்த்தை மூலம் காண்போம் இவ்வாறு சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாத்தளையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் ஒருமைப்பட்ட சிறிலங்காவின் கீழ் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண ஜனாதிபதி தயாராக உள்ளார். வடக்கு கிழக்கு பகுதியில் பிரச்சினை இருப்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதேவேளை அதனைத் தீர்க்க பேச்சுவார்த்தையே சிறந்தது என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் கொண்டுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

# அதிகாரி கைது

இராணுவத்திலிருந்து ஆறு மாதங்களுக்கு முன் தப்பி ஓடிய இராணுவ கனிஷ்ட அதிகாரி ஒருவர் தங்காலை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வடக்கு-கிழக்குக்கு மாற்றம் செய்யப்பட்டபோது இராணுவத்தை விட்டு தப்பி ஓடியவராவார்.

# அநுராவின் இராஜினாமா; எதிர்க்கட்சி பலவீனமடையும்

## தினேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் திரு. அநுரா பண்டாரநாயக்கா இராஜினாமா செய்திருப்பது தொடர்பாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல தலைவர்களும் விசனம் தெரிவித்துள்ளனர். அநுரா தொடர்பாக சுதந்திரக் கட்சி நடந்து கொண்டவிதம் தொடர்பாகவும் அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நிலைமைகளினால் எதிர்க்கட்சிகள் மேலும் மிகுந்த பலவீனமான நிலையை அடையும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

# அநுராவின் இன்றைய நிலைக்கு அவரே பொறுப்பாளியாவார்

## —தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்காவுக்கு கட்சியில் ஏற்பட்ட பிரச்சினை முழுவதற்கும் அவரே காரணகர்த்தா ஆவார் என்று சுதந்திரக் கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் அவர் மேலும் கூறுகையில், இதனை மழுங்கடிப்பதற்காக கட்சி மேற்கொண்ட நடவடி

வந்தது ஆனால் இந்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தாது அவர் ராஜினாமா செய்து விட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சிறிமாவோவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்

# எமது முற்றத்தால் எதிரியின் "டாங்கி" போவதா?

ஆயுதப் போராட்டம்

இது ஏன் எழுந்தது ?

வேறு வழியில்லாது கொடுமை செய்யவரும் சிங்களப் படையைத் தடுத்து எம்மை நாமே பாதுகாக்க எழுந்ததே எம் ஆயுதப் போராட்டம்!

ஆக்கிரமிப்பாளன் தான் நினைத்தபடி இன்று அழிக்க முடியாது திணறுகின்றானே! அதற்குக் காரணம் வேறெதுவுமல்ல. நாம் தொடுக்கும் எதிர்த்தாக்குதலும் நாம் கையில் ஏந்தியுள்ள ஆயுதங்களும் தான்.

ஆகாயத்திலிருந்து குண்டுமழை பொழியும் அவன்,

எட்டிய தூரத்திலிருந்து எறிகணை வீசும் அவன்,

வீடு வீடாக நுழைந்து கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை செய்ய முடியாது திணறுகின்றானே! இதற்குக் காரணமென்ன? வேறெதுவுமல்ல; எமது ஆயுதப்போராட்டம் தான்.

ஆனையிறவுச் சமரின் போது கனரக ஆயுதங்கள், கவச வாகன அணிகள், பீரங்கிப் பிரிவுகள் சகிதம், வான் படை ஊர்திகளின் முழு அளவிலான தாக்குதல்களுடன் கடல் வழியாகத் தரையிறங்கி நகர்த்த 8000 பேரைக் கொண்ட பெரியதொரு படையணியை ஒரு முனையிலும்,

சகலவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் ஏறக்குறைய 1000 படையினரைக் கொண்ட படைத் தளத்தை இன்னொரு முனையிலும் புலி வீரர்கள் எதிர்கொண்டு மோதியிருந்தார்கள்.

சிறிலங்காவின் முப்படைகளுக்கும் எதிராக 24 நாட்கள் போரிட்டு நின்றார்கள்

இரண்டு பாரிய முனைகளில் நிகழ்ந்த இச் சண்டையில் சிறிலங்காப் படைகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அதன் நான்கிலொரு பங்கு தொகையுடனான போராளிகளே இங்கு களத்தில் போராடி நின்றார்கள்,

இருந்தும் அந்தப் பெரும்படை அடைந்த பேரிழப்பு கொஞ்ச நஞ்சமல்ல!

எனவே தான் எம் போராட்டத்தைப் பார்த்து உலகம் வியந்து நின்றது.

சிங்களப் படைக்கு நிகரான ஆட்பலத்துடன் தமிழர் படை அங்கு மோதியிருக்குமானால் நிச்சயம் ஒரு பிரளயம் ஆனையிறவில் நடந்து முடிந்திருக்கும்.

இதேபோன்றுதான் புலோப்பளைச் சமரிலும் எதிரி படையின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த தொகையினரான புலிகளே சமராடி சாதனை படைத்தனர்.

இங்கும், புலிகளின் தொகை படையினரது தொகைக்கு இணையாக இருந்திருக்குமானால் பூகம்பத்தில் அகப்பட்ட தொடர்மாடி போல சிங்களப் படை அழிந்திருக்குமே!

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் எமது முதற் தேவை படைபலமேயாகும்.

ஈடிணையில்லாத மனஉறுதி எம் இனத்திடம் இருக்கின்றது,

எமது இலட்சியத்திற்காக உயிரைத் துச்சமாக்கிப் போராடும் துணிவு எமது இளைஞர்களிடம் இருக்கின்றது.

எந்தச் சூழ்நிலையிலும், எந்த வேளையிலும் எமது இனத்தை - போராட்டத்தை வழிநடாத்த ஒரு மாபெரும் தலைவன் எம்முடன் இருக்கின்றான்.

இப் பெரும் பலங்களுடன் எம்மிடம் மேலும் வளர்ந்திட வேண்டியது ஆட்பலமாகும்.

இனிமேலும் தாமதிக்கவோ! தயங்கவோ கூடாது.

தமிழீழத்தின் இளம் சந்ததி அணி திரண்டு ஒரு பெரும் சேனையாக மாற வேண்டிய வரலாற்றுத் தேவை இன்று - என்றுமில்லாதவாறு எழுந்துள்ளது.

எமது இனத்தின் வருங்காலமும் இதிலேதான் தங்கியுள்ளது.

இப்போது எதிரி மீண்டுமொரு படையெடுப்புக்கு தயாராகின்றான்.

இம்முறை ஒரு நகர்ப்பகுதி சிங்களப் படையின் இலக்காக

தமது பாதுகாப்பிற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடுவதா? அன்றி சிங்கள இராணுவத்திடம் தலைமுறை தலைமுறையாக அடிமைகளாக வாழ்வதா? என்பதே அது ஆகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று ஒரு தர்க்க பூர்வமான வளர்ச்சியைக் கண்டுள்ளது. சாத்வீக முறையில் ஆரம்பித்த இப்போராட்டம் இன்று சிங்கள இராணுவத்தின் பாரிய படை எடுப்புக்களை தடுத்து நிறுத்தும் அளவிற்குப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளது. அத்தோடு தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளது.

இந்நிலையானது, இலகுவில் எட்டப்பட்டதொன்றல்ல, ஆயிரக் கணக்கான போராளிகளின் தியாகத்தினாலும், பல்லாயிரக்கணக்கான மக்களின் அர்ப்பணிப்புக்களாலும் அடையப்பட்டதொன்று. தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் இதுவரை 600க்கு மேற்பட்ட விடுதலைப்புலிகள் தமதுயிரை தற்கொடை செய்துள்ளார்கள். 40.000க்கு மேற்பட்ட தமிழ் மக்கள் சிங்களப் பேரினவாதத்தின் இன வெறிக்குப் பலியாகியுள்ளனர், பல்லாயிரம் கோடி ரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான, தியாகங்களின் மூலமும், அர்ப்பணிப்புக்கள் மூலமும் தமிழீழப் போராட்டம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளதாயினும், இன்னமும் அதன் எல்லை சற்று தொலைவிலேயே இருப்பதோடு, தமிழ் மக்களின் பாதுகாப்பும், சுதந்திரமும் பூரணமாக உறுதிப்படுத்தப்பட்டதாக இல்லை. சிங்களப் பேரினவாதம், தமிழ் இனத்தை அழித்தே விடுவதென்ற நோக்கில், தமிழர் மீது தாக்குதலைத் தொடுக்கும் முயற்சியில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளது.

கடந்த இரு தசாப்தத்தின் முன்னர், சிங்கள அரசியல்வாதிகளும், பேரினவாதிகளும் தமிழ் மக்களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. அவர்கள் 'மெயில்' புகையிரத வண்டியில் முருங்கைக்காய் கட்டுடன் கொழும்பு வரும் அப்பாவிகளாகவே தமிழ் மக்களை எண்ணியிருந்தனர். அவ்வாறு இல்லாமல் தமிழ் மக்களை தமக்கு சமமான மக்களாக, இலங்கையின் பிரஜைகளாக கருதியிருப்பார்களே யானால் இன்று இந்நிலை உருவாகியிருக்காது. ஆனால், இதற்கு மாறாக தமிழர் மீது வன்முறையையும் அரச பயங்கரவாதத்தையுமே சிங்கள அரசுகள் கட்டவிழ்த்துவிட்டன. இதனால், ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாததாயிற்று.

ஆனால், இன்று தமிழர் குறித்து அவ்வாறானதொரு, அபிப்பிராயம் சிங்களவர்கள் மத்தியில் இல்லை. விடுதலைப்புலிகள் அதை மாற்றிவிட்டார்கள். தமிழர்கள் அடிமைகளாக அடிபணிந்து வாழமாட்டார்கள் என்பதைப் புரிய வைத்துள்ளார்கள். ஆயினும் தமிழ் மக்கள் தமது தாயக மீட்புப் போரில் இறுதி இலட்சியத்தை அடைவதற்காகத் தொடர்ந்து போராடுவது அவசியமாகிறது. அவ்வாறு போராடாது பின்னிற்றல் என்பது வெண்ணெய் திரண்டுவரும் வேளையில் பானையை உடைத்தது போன்றதொன்றாகும்.

ஆகையினால், தமிழ் மக்கள் தமது பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் நிரந்தரமானதாக உறுதி செய்யும் பொருட்டு விடுதலைப்புலிகளுடன் போராட்டத்தில் அணிதிரளவேண்டும். அவ்வாறுஇல்லாதுஇன்று போராடத் தயங்கினால் தமதுஎதிர்காலச் சந்ததிக்கு விட்டுச்செல்வது அடிமைச் சாசனமாகவே இருக்கும். சிங்கள அரசுஇனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுஎதையும் கொண்டுவரும், அதன் மூலம் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என யாராவது எண்ணுவார்களே ஆனால் அவர்களுக்காக நாம் கவலைப்படுவதைத் தவிர வேறுவழியில்லை. இதேவேளை சுதந்திரம் என்பது யாரும் போடும் பிச்சையும் அல்ல. அதைப் போராடியே பெற வேண்டும். அப்பொழுதே அதன் மகிமை புரியும்.

---

சிறிலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மாத்தளையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் ஒருமைப்பட்ட சிறிலங்காவின் கீழ் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு

---

## எதிர்க்கட்சி பலவீனமடையும்

### திநேஷ் குணவர்த்தனா தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் திரு. அநுரா பண்டாரநாயக்கா இராஜினாமா செய்திருப்பது தொடர்பாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த பல தலைவர்களும் விசனம் தெரிவித்துள்ளனர். அநுரா தொடர்பாக சுதந்திரக் கட்சி நடந்து கொண்டவிதம் தொடர்பாகவும் அவர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நிலைமைகளினால் எதிர்க்கட்சிகள் மேலும் மிகுந்த பலவீனமான நிலையை அடையும் என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் திநேஷ் குணவர்த்தனா கூறியுள்ளார்.

---

## அநுராவின் இன்றைய நிலைக்கு அவரே பொறுப்பாளியாவார்

### -தர்மசிறி சேனநாயக்கா

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்காவுக்கு கட்சியில் ஏற்பட்ட பிரச்சினை முழுவதற்கும் அவரே காரணகர்த்தா ஆவார் என்று சுதந்திரக் கட்சிச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா கூறியுள்ளார்.

பத்திரிகையாளர் மத்தியில் அவர் மேலும் கூறுகையில், இதனை மழுங்கடிப்பதற்காக கட்சி மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக கட்சியின் முக்கியஸ்தர்களையோ அல்லது அபிமானிகளையோ அநுரா குறைசொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அநுராவின் அரசியல் வாழ்வின் ஆரம்பம் முதலே சுதந்திரக் கட்சியில் எவருக்கும் கொடுக்காத முக்கிய பதவிகளை கட்சியினால் அவருக்கு வழங்கப்பட்டு வந்தது ஆனால் இந்த சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்தாது அவர் துஷ்பிரயோகம் செய்து விட்டார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

## சிறிமாவோவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்

### பௌத்த பிக்கு வேண்டுகோள்

(கொழும்பு)

பௌத்த மதத்தையும், சிங்கள இனத்தையும் மீண்டும் காப்பாற்ற தமது சகல நலன்களை மட்டும் இல்லாமல் கடைசியில் தனது உயிரையும் கொடுத்த பண்டாரநாயக்காவின் நடவடிக்கைக்கு தம்மை தயார் படுத்த மக்கள் தயாராகவுள்ளார்கள். எனவே பண்டாரநாயக்காவின் அடிச்சுவடை பின்பற்றும் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு இதற்காக ஒரு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என பௌத்த பிக்கு தொடவொகம ரத்னசாரா தெரிவித்துள்ளார்.

மேலும் இது பற்றி தெரிவிக்கையில், இன்று இந்த நாட்டின் உரிமையை எமது இனம் இழந்து வருகின்றது என்றார்.

---

# மாவட்ட பணிப்பாளர் அதிகாரங்கள் மாகாணத்திற்கு செல்கின்றன

## இ.த.ஆ. பொதுச்செயலாளர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களின் பல அதிகாரங்கள் கோட்டங்களுக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படுகின்ற போதும் மாவட்டங்களின் சில அதிகாரங்கள் மாகாண அமைச்சுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த மகாசிவம் தெரிவித்துள்ளார். அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் சர்வதேச கல்வியகம் பிரட்ரிக் ஈபர்ட் மன்றம் ஆகியவற்றுடன் இ. த. ஆ. சங்கம் இணைந்து ''கல்வி நிர்வாகப் பரவலாக்கமும், புதிய கோட்டக் கல்வி, வலயக் கல்வி அலுவலகங்களும்'' என்ற விடயம் தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய அவர் மேலும் கூறுகையில், இதுகாலவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் கையாளப்பட்ட சகல விடயங்களும் இங்கேயே தொடர்ந்து கையாளப்பட வேண்டும்.

அதற்கு மேலாகவும் சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அதுவே அர்த்தமுள்ள அதிகாரப் பரவலாக்கமாகும். கோட்டங்களுக்கு இடையிலான இடமாற்றத்திற்காக ஆசிரியர் ஒருவர் திருக்கோணமலைக்கு செல்ல வேண்டிய நிலையை அதிகாரப் பரவலாக்கம் எனக் கூறமுடியாது இது அதிகாரக் குவிப்பு ஆகும். இது போன்று சில அடிப்படை விடயங்கள் மாகாணத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றன. சில விடயங்கள் தொடர்பான அதிகாரங்கள் எங்கு கையாளப்படவேண்டும் என்பது தெளிவில்லாமல் இருக்கின்றன.

எனவே புதிய கோட்ட, வலய கல்வி அமைப்பு முறைகளை ஆசிரியர்கள் மிகுந்த அவதானத்தோடும், எச்சரிக்கையோடும் எதிர்கொள்ள வேண்டும். இதனால் வரக்கூடிய நன்மைகளை ஏற்றுக் கொள்ளும் அதே சமயம் மாகாணத்தில் அதிகாரம் குவிக்கப்படுவதற்கு எதிராக போராடத் தயாராகவும் ஆசிரியர்கள் இருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக் கருத்தரங்கத் தொடரின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ். பிரதேச செயலாளர் கலாநிதி க. குணராசா தமதுரையின் போது அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்டு நோக்கினால் பிரதேச மட்டத்திற்கு அதிகாரம் பரவலாக்கப்படுவது சிறந்தது. அது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதே. ஆனால் இங்கு ஓர் அரசியல் சதி திட்டமிடப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு பகுதியில் இருக்கும் 70 பிரதேச சபைகளில் 13 பிரதேசங்கள் சிங்களப் பிரதேசங்களாக கணிக்கப்பட்டுள்ளன, எனவே அரசியல் நோக்கில் இதனைப் பார்த்தால் தமிழர்கள் தம் பாரம்பரிய பிரதேசங்களில் 13 பிரதேச நிலப்பரப்பை இழக்க வேண்டி நிலை தோன்றலாம் எனக் குறிப்பிட்டார்.

---

க்கு இணையாக இருந்திருக்குமானால் பூகம்பத்தில் அகப்பட்ட தொடர்மாடி போல சிங்களப் படை அழிந்திருக்குமே!

எமது விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் எமது முதற் தேவை படைபலமேயாகும்.

ஈடிணையில்லாத மனஉறுதி எம் இனத்திடம் இருக்கின்றது,

எமது இலட்சியத்திற்காக உயிரைத் துச்சமாக்கிப் போராடும் துணிவு எமது இளைஞர்களிடம் இருக்கின்றது.

எந்தச் சூழ்நிலையிலும், எந்த வேளையிலும் எமது இனத்தை - போராட்டத்தை வழிநடாத்த ஒரு மாபெரும் தலைவன் எம்முடன் இருக்கின்றான்.

இப் பெரும் பலங்களுடன் எம்மிடம் மேலும் வளர்ந்திட வேண்டியது ஆட்பலமாகும்.

இனிமேலும் தாமதிக்கவோ! தயங்கவோ கூடாது.

தமிழீழத்தின் இளம் சந்ததி அணி திரண்டு ஒரு பெரும் சேனையாக மாற வேண்டிய வரலாற்றுத் தேவை இன்று - என்றுமில்லாதவாறு எழுந்துள்ளது.

எமது இனத்தின் வருங்காலமும் இதிலேதான் தங்கியுள்ளது.

இப்போது எதிரி மீண்டுமொரு படையெடுப்புக்கு தயாராகின்றான்.

இம்முறை ஒரு நகர்ப்பகுதி சிங்களப் படையின் இலக்காக இருக்கலாம் என்று பி. பி. சி. வானொலி கூறுகின்றது.

அந்த நகர் யாழ் நகராக இருக்கலாம், சுன்னாகமாக இருக்கலாம், சாவகச்சேரி - கொடிகாமமாக இருக்கலாம் அல்லது, வல்வெட்டித்துறை - பருத்தித்துறையாக இருக்கலாம், அல்லது நெல்லியடி - அச்சுவேலியாக இருக்கலாம்.

இந்த நகரைப் பிடிக்க எத்தனை கிராமங்களைப் பிடிக்க வேண்டும், எத்தனை வீடுகளை அழிக்க வேண்டும், எத்தனை தமிழர்களைக் கொல்ல வேண்டும் என்ற கணக்கு சிங்களப் படைக்குத்தான் தெரியும்,

ஓர் இலட்சம் இராணுவத்தை வைத்துக் கொண்டு மேலும் படைக்கு ஆட்சேர்க்க சிறிலங்கா அரசு முயல்கின்றது

இந்த இலட்சம் படைகள் வந்து எமது மக்களை அழிக்க நாம் அனுமதிக்கலாமா ?

சிங்களப்படையின் கவச வாகனங்களும், பீரங்கி வண்டிகளும் எமது முற்றத்தை கிழித்துக்கொண்டு செல்ல நாம் விடலாமா ?

எமது பெற்றோர்களும் உடன் பிறந்த சகோதரங்களும் அகதிகளாக, அல்லப்பட்டு அலைய நாம் இடம் கொடுக்கலாமா ?

இதற்கெல்லாம் இடங்கொடுத்து விட்டு வெறும் ஜடமாக வாழ்வது ஒரு வாழ்வா ?

நாங்கள் வீரத்தை கவசமாகக் கொண்டு வாழ்ந்தஒரு பெரும் இனம்.

மானம் போகும்போது உயிரையும் விட்ட மறவர் குலம்

ஆனால் வீரத்தைக்காட்டி எமது மானத்தைக் காப்போம்.

ஆயுதத்தை ஏந்தி சிங்களப்படைகளை அழித்தொழிப்போம்.

---

## பாராளுமன்ற தேர்தலுடன் கருத்துக்கணிப்பு நடத்தப்படும்

### யெல்ட்சின் பணிப்புரை

ரஷ்யாவில் பாராளுமன்றத் தேர்தல்கள் நடத்தப்படும் அதேவேளை புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான கருத்தறியும் வாக்கெடுப்பு ஒன்றை டிசம்பர் 12-ம் திகதியன்று நடத்துவதற்கு அதிபர் பொறிஸ்யெல்ட்சின் ஆணை பிறப்பித்துள்ளார்.

கருத்துக்கணிப்பு முடிவுற்று முடிவுகள் வெளியாகிய பின்னர் புதிய அரசியலமைப்பு குறித்து புதிய பாராளுமன்றம் விவாதம் நடத்துவதை தவிர்ப்பதற்காகவே இந்த ஏற்பாட்டை அதிபர் யெல்ட்சின் செய்திருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இதேவேளை எதிர்க்கட்சிகளுக்கு சார்பான பத்திரிகைகளுக்கு அதிபர் யெல்ட்சின் தடை விதித்திருப்பதை எதிர்க்கட்சி நாளேடுகளின் ஆசிரியர்கள் கண்டனம் செய்துள்ளனர்

Chundikuli Branch Library

ஈழநாதம்

# கழக தொண்டர்கள் மத்தியில் என்னை குற்றவாளியாக்க முயற்சி

## கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

என்னையும் விடுதலைப்புலிகளையும் இணைத்து தலைவருக்குத் தீங்குவிளைவிக்க திட்டமிடுவதாக பொய்ப்பழி சுமத்தினால்தான் கழகத் தொண்டர்களின் மத்தியில் என்னை ஒரு குற்றவாளி போல ஆக்க முடியும் என்று பொறுப்புவாய்ந்த சில அக்கறையுள்ள மனிதர்கள் சதித்திட்டம் வகுத்ததை நான்கு மாதங்களுக்கு முன்னரே நான் அறிய நேர்ந்தது இவ்வாறு தி. மு. க. பிரமுகரும், ராஜ்ய சபா எம். பியுமான வை. கோபாலசாமி சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இச் சதியினால் எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும், கவலையையும் என்பால் நல்லெண்ணம் கொண்ட கழகத்தின் முன்னணியினரிடம் நான் தெரிவித்தேன். இதனை என்னால் நிரூபிக்க முடியும். உளவுத்துறையின் கடிதமே இச் சதித்திட்டத்தின் தயாரிப்பு என்று நான் நம்புவதால் வேறு விதமான மறுப்புக்கு அவசியம் ஏற்படவில்லை. தலைவரின் உயிருக்கு அபாயம் ஏற்படுமானால் அவரைப் பாதுகாக்க சர்வ பரித்தியாகத்திற்கும் தயாராக இருப்பவன் நான்.

தலைவர் கருணாநிதி என் மீது தொடுத்துள்ள குற்றச்சாட்டுக்களை எண்ணும்போது ஒருவித கசப்பும், வெறுப்பும் என்மீது தலைவருக்கு ஏற்பட்டிருப்பதையே உணரவைக்கின்றது.

''தம்பி...தம்பி...'' என்று அழைத்த தலைவர் அறிக்கையில் ஏழு இடங்களில் திரு. கோபாலசாமி அவர்கள்என்று எழுதியிருப்பதுதான் காயப்பட்ட மனதில் முள்ளாகத் தைக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

கழகத்தில் சாதாரண தொண்டனாக பணியாற்றும் மனப்பக்குவத்தை பெற்றுள்ள நான் அடுத்த தலைவர் என்ற எண்ணத்துடன் செயல்படுவதாக கட்சித்தலைவர் குற்றஞ்சாட்டி இருப்பது எத்தவறும் செய்யாத எனக்கு கொடுக்கப்பட்ட கொடுந் தண்டனையாகவே கருதுகிறேன். தி.மு.க.வில் கோபாலசாமி ஒரு புற்றுநோய் என திரும்ப திரும்ப சுப்பிரமணியம்சுவாமி பேட்டி ஒன்றில் என்னை இழித்தும், பழித்தும் கண்டனம் செய்தபோதெல்லாம் என்ன காரணத்திலோ தலைவர் கருணாநிதி சுப்பிரமணியம் சுவாமியைக் கண்டிக்கவில்லை.

தலைவர் கருணாநிதி விடுத்த அறிக்கை நெடுகிலும் நான் போட்டித் தலைவராக இடம்பிடிக்கத் திட்டமிட்டதைப் போன்ற எண்ணத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே குற்றச்சாட்டுகள் அமைந்துள்ளன. உளவுத்துறை அனுப்பிய தகவலின் படி எனது ஆதாயத்திற்குத்தான் புலிகள், தலைவர் கருணாநிதியை தீர்த்துக்கட்ட திட்டமிட்டதாக வெளிவந்த செய்தி உறுதிப்படுத்தாத ஒன்று ஆனால் புலிகள் உங்களுக்கு ஏன் குறிவைக்க வேண்டும் என நிருபர்கள் வினவியபோது அந்த நோக்கம் அரசு அனுப்பிய கடிதத்திலேயே இருக்கின்றது என கருணாநிதி கூறியிருந்தது இந்த பயங்கரமான குற்றச்சாட்டை ஊர்ஜிதப்படுத்தவே. தலைவர் கருணாநிதி விரும்புகிறார் என்பதை அறிந்தபோது ஆயிரம் பாம்புகள் கடித்ததைபபோன்று துடி துடித்தேன்.

''என் தம்பி கோபாலசாமி என் மெய்க்காவலன் அவனால் தீங்கு வராது'' என்று கருணாநிதி கூறியிருந்தால் நான் இது வரை அவருக்கு காட்டிய விசுவாசத்திற்கு தலைவர் கருணாநிதி தந்த அங்கீகாரமாக கருதி இருப்பேன் என்றும் வை. கோபாலசாமி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## மென்பந்து கிரிக்கட்

யாழ். மாவட்டப்பாடசாலைகளுக்கான மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டிகளில் மரவட்ட இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிக்குக் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

## 'செவ்வந்தி' வெளியீடு

(கொழும்புத்துறை)

''செவ்வந்தி'' சஞ்சிகை கையெழுத்துப்பிரதி வெளியீட்டு விழா இன்று பி. ப 2.00 மணிக்கு கட்டப்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையப் பாலர் பாடசாலை மண்டபத்தில் நிலையக்கலைக் குழுத் தலைவர் திரு. இராசேந்திரம் ஸ்ரீபதி தலைமையில் நடைபெறும். (24)

## விளையாட்டு விழா

(கொழும்புத்துறை)

அராலி நிலாவொளி விளையாட்டுக் கழகம் நடாத்தும் விளையாட்டுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அராலி மத்தியில் நடைபெறவுள்ளது. (24)

## தற்கொலைப்படை அங்கி கடல் மூலம் வந்ததாம்

(கொழும்பு)

முகத்துவாரம் கடற்பகுதியில் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட தற்கொலைப்படையினரின் அங்கி கடல்மூலமாகவே கடத்திவரப்பட்டிருக்கலாம் என பொலிசார் தற்போது தெரிவித்துள்ளனர் கடலில் நின்ற பெரிய கப்பல் ஒன்றிலிருந்து படகுமூலம் இது கரைக்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி அங்கி நீர் புகாத பெட்டி ஒன்றிலேயே வைக்கப்பட்டிருந்தது என்றும் படகில் இந்த அங்கி எடுத்துவரப்பட்டிருந்தால் மேலும் சில இவ்வாறான அங்கிகள் எடுத்து வரப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸ் புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கண்டுபிடிக்கப்பட்ட இவ் அங்கி பெண்கள் அணிவதற்கு ஏற்றவாறு தயாரிக்கப்பட்டது எனவும் யாழ்ப்பாணத்திலேயே இதுதைக்கப்பட்டிருக்க வேண்டும் என பொலிசார் கருதுவதாகவும் வேறொரு செய்தி தெரிவிக்கிறது.

## சுகாதாரக் கருத்தரங்கு

தொற்றுநோய் தடுப்பு, சுத்தம் சுகாதாரம் பேணல், தற்போதைய சூழ்நிலையில் உயிர் பாதுகாப்பிற்கு வழிவகுத்தல் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலா தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ள மேற்படி கலந்துரையாடலில் அப் பிரதேச சபையைச் சார்ந்த சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுடன் தவறாது வருகை தருமாறு வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (41)

## கோழிகளுக்கு தடுப்பூசி

சரணவாய் அறிவாலயம் சனசமூக நிலையத்தில் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கோழிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (யோ)

## சிறிலங்கா தூதரகம் முன் தமிழகமீனவர் ஆர்ப்பாட்டம்

சிறிலங்கா கடற்படையினரால் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொலை செய்யப்படும் சம்பவங்களை ஆட்சேபித்து கடந்தவார ஆரம்பத்தில் சென்னையில் உள்ள சிறிலங்கா உதவி தூதரகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இந்திய மீனவர்களுக்கு எதிரான அட்டூழியம் தொடருமானால் இந்தியாவின் தென்கிழக்கு கரையோரமுள்ள சகல துறைமுகங்களிலும் மறியல்செய்து வேலைகளை ஸ்தம்பிக்கச் செய்யப் போவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர் கூறியுள்ளனர். தமிழக மீனவ இளைஞர் முன்னணியே இந்த ஆர்ப்பாட்டத்தை சிறிலங்கா உதவி தூதரகம் முன்பாக நடத்தியது.

கணிசமான குறிப்பிட்ட காலத்தினுள் சிறிலங்கா கடற்படையினரின் அத்துமீறிய செயல்கள் நிறுத்தப்படாவிட்டால் அடுத்த நடவடிக்கையை நாம் மேற்கொள்வோம் என இம் முன்னணியின் தலைவரான அன்பழகன் சிறிலங்கா உதவி தூதுவர் வி. கே. வல்சனிடம் தெரிவித்தார்.

## மீனவர் மீது தாக்குதல் தடுப்பதாக சிறிலங்கா உறுதி

(டில்லி)

தமிழக மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிறிலங்கா இந்தியாவிடம் ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த இரு நாட்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின் இந்திய வெளியுறவு செயலர் ஜே. என். டிக்ஷிற், சிறிலங்கா வெளியுறவு செயலர் பேர்னாட் திலகரட்ன ஆகியோர் நேற்று கூட்டாக புதுடில்லியில் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர்

சிறிலங்கா கடற்படையால் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்து இரு நாடுகளும் தீவிரகவனம் செலுத்தி இதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

## வீரவேங்கை கணேஸிற்கு மக்கள் இறுதி அஞ்சலி

(தென்மராட்சி)

நேற்று முன்தினம் (15-10-93) வெள்ளிக்கிழமை சுகயீனம் காரணமாக வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை கணேஸ் (அந்தோனிப்பிள்ளைஆனந்தராசா மட்டுநகர்) என்ற போராளியின்புகழுடல் நேற்று மீசாலை வாணி கல்வி வளர்ச்சிக் கழக மண்டபத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது இம்மாவீரருக்கு பெரும் திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியை மலர்தூவி உணர்வு பூர்வமாக செலுத்தினர்.

பின்னர் சாவகச்சேரி சிற்றூர் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் இடம்பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. விபுலன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த திரு. தம்பி, தென்மராட்சி மகளிர் அமைப்பு அரசியல் பொறுப்பாளர் செல்வி கலைச்செல்வி ஆகியோர் அஞ்சலியுரையை நிகழ்த்தினர். இந் நிகழ்வுகளின் இறுதியாக இம்மாவீரருடைய வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனி வர வீதி ஓரங்களில் இரு மருங்கிலும் இல்லங்களின் வாசல் தோறும் மக்கள் நின்று மலர்களை தூவி அஞ்சலி செலுத்தினர், இம்மாவீரருடைய வித்துடல் இராணுவ மரியாதையுடனும், மாணவர் இயக்க பாண்ட் வாத்தியத்துடனும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (86)

## புகைப் படக்

வைத்தனர். யாழ் மாவட்டத் தளபதி திரு. ம. அன்பு அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்தார். அமைதி வணக்கத்தினை அடுத்து அரசியற்துறை பொறுப்பாளர் திரு. சு ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கண்காட்சியினைத் திறந்துவைத்தார்.

கண்காட்சியில் தேசியத்

## பேச்சுப் போட்டி நடத்த ஏற்பாடு

[தொல்புரம்]

சைவத்தொண்டர் யாழ்ப்பாணக்கு நல்லூர் ஆறுமுக

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 16-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11254

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

28-4367, 28-1706, 26-3812, 41-9038, 27-9779, 28 3306, 26 2317, 27-7717, 42 3615, 42-9326, 26-0736, 24 9489 42-2862, 27-5045, 26-6461, 24-5912, 28 5484, 41-9895, 27-7822, 28-1020, 42-3419, 43 4045, 26-3177 27-8155, 24-6475, 41-2659, 26-2297, 26-8878, 27- 5912, 24-2545, 40 0770, 24-9938, 24-4265, 27-2107, 41-9663, 41 7297

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9492, 26 4139, 24-5955, 27-2034, 24-1983,

யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்
ROARING FIRE
(முழுநீள கராட்டிச் சித்திரம்)
தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
காலை 10-30மணி, மாலை 4, 6 மணி
சனி, ஞாயிறு தினங்களில்
பிற்பகல் 2. 30 மணிக்கு

மான மறுப்புக்கு அவசியம் ஏற்படவில்லை. தலைவரின் உயிருக்கு அபாயம் ஏற்படுமானால் அவரைப் பாதுகாக்க சர்வ பரித்தியாகத்திற்கும் தயாராக இருப்பவன் நான்.

ணத்திலோ தலைவர் கருணாநிதி சுப்பிரமணியம் சுவாமியைக் கண்டிக்கவில்லை.

தலைவர் கருணாநிதி விடுத்த அறிக்கை நெடுகிலும் நான் போட்டித் தலைவராக


**யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்**

# ROARING FIRE

(முழுநீள கராட்டிச் சித்திரம்)

**தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி**

**சனி, ஞாயிறு தினங்களில்**

**காலை 10-30 மணி, மாலை 4, 6 மணி**

**சனி, ஞாயிறு தினங்களில்**

**பிற்பகல் 2. 30 மணிக்கு**

**விசேட காட்சிகளாகவும்**

**பருத்தித்துறை, இளாலி**

**கடற்கரும்புலிகளின் தாக்குதல்,**

**சம்பவங்களை உள்ளடக்கிய**

**ஆகஸ்ட் மாத ஒளிவீச்சும்**

**காண்பிக்கப்படும்**

(சி-7454)


# கண்ணீர்ப் பூக்கள்

## கப்டன் பைரவன்

## (ச. வாகீசன்)

அன்புத்தம்பி வாகீசா!
கோணமா மலையினிலே
பொங்கிஎழும் அலை நடுவே
பூத்த தமிழ்ப் பூவே
தமிழனுக்கோர் நாடு மீட்க
தலைவன் வழி நடந்தாயோ!
கடலினில் எதிரியை கலைத்திட என்று
கடலிற் புலி ஆனாயோ
தமிழ் ஈழமது பூக்கமுன்னே
வீழ்ந்து விட்ட விதைகளுடன்
வித்தாக வீழ்ந்தவனே
உனக்கும் எமது கண்ணீர்ப் பூக்கள்

14-10-93 அன்று கடற்பயிற்சியில் ஈடுபட்டிருக்கையிலேற்பட்ட விபத்தில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வாகீசனுக்கு எமது கண்ணீர்ப்பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

**14-ம் அணி**

(6312) **மருத்துவ பீட மாணவர்கள்**


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மசேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


யின்புகழுடல் நேற்று மீசாலை வாணி கல்வி வளர்ச்சிக் கழக மண்டபத்தில் மக்களின் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டது இம்மாவீரருக்கு பெரும் திரளான மக்கள் தமது இறுதி அஞ்சலியை மலர்தூவி உணர்வு பூர்வமாக செலுத்தினர்.

பின்னர் சாவகச்சேரி சிற்றூர் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் இடம்

**புகைப் படக்**

வைத்தனர். யாழ் மாவட்டத் தளபதி திரு. ம. அன்பு அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றிவைத்தார். அமைதி வணக்கத்தினை அடுத்து அரசியற்துறை பொறுப்பாளர் திரு. சு ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் கண்காட்சியினைத் திறந்துவைத்தார்.

கண்காட்சியில் தேசியத் தலைவர் மூத்த புலிகளுடனும், இளம் புலிகளுடனும், கரும் புலிகளுடனும் காணப்படும் புகைப்படங்கள், சுதுமலைப் பிரகடனம், முத்தமிழ் விழா, மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் புகைப்படங்களும், சிங்களப் படை, அமைதிப்படை, என்பவற்றின் வெறியாட்டங்கள், தமிழீழ எழுச்சிஊர்வலங்கள், மக்களோடு புலிகள், மாணவரின் மனக் குமுறல், போராளிகளின் பயிற்சிப்பாசறை, கள நிகழ்வுகள், காவற் கடமையில் புலிகள், புலோப்பளை சமரில் அழிக்கப்பட்ட டாங்கிகள், புலிகளின் சாதனைகள், கடற்புலிகளின் போர்ப்பயிற்சிஅவர்களின்சாதனைகள், மகளிர் படையணியின் சாதனைகள்,பயிற்சிப்பாசறைகள், ஈழத் தமிழருக்காக தமிழகத்தின் குரல், வெளிநாடுகளில் புலிகள் ஆதரவ நிகழ்ச்சிகள், புலிகளால் கைப்பற்றப்பட்ட எதிரிகளின்ஆயுதங்கள், திலீபனின் படத் தொகுப்பு, தளபதி கிட்டுவின் படத்தொகுப்பு, தேசியத் தலைவர் சாதனையாளருக்கு பரிசு வழங்கல், ஆனையிறவு சமர், இலங்கை இந்திய ஒப்பந்தம், மலையகத்தின்சோகவரலாறு, வெளிநாடுகளில் விடுதலை இயக்கங்கள், விடுதலைப் புலிகளின் சுவரொட்டிகள், தமிழீழ பொருளாதார வளம், செஞ்சோலை, யுத்தக் கைதிகள் விடுவிப்பு, மண்கிண்டி முகாம் தகர்ப்பு முதலிய காட்சிகள் அடங்கிய பல நூற்றுக் கணக்கான பெரிய அளவிலான வர்ண, கறுப்பு - வெள்ளை புகைப்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப் புகைப்பக் கண்காட்சியை பெருமளவு மக்கள் பார்வையிட்டு வருகின்றனர். இன்றும் இக் கண்காட்சி நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. இக் கண்காட்சியினை விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு ஒழுங்கு செய்துள்ளது. (41)

ஆகியோர் அஞ்சலியுரையை நிகழ்த்தினர். இந் நிகழ்வுகளின் இறுதியாக இம்மாவீரருடைய வித்துடல் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் பவனிவர வீதி ஓரங்களில் இரு மருங்கிலும் இல்லங்களின் வாசல் தோறும் மக்கள் நின்று மலர்களை தூவி அஞ்சலி செலுத்தினர், இம்மாவீரருடைய வித்துடல் இராணுவ மரியாதையுடனும், மாணவர் இயக்க பாண்ட் வாத்தியத்துடனும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (86)

## பேச்சுப் போட்டி நடத்த ஏற்பாடு

[தொல்புரம்]

சைவத்தொண்டர் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் குருபூசையை முன்னிட்டு பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

யாழ். சைவ பரிபாலன சபையால் நடாத்தப்படும் பாடசாலை மாணவர்க்கான மேற்படி பேச்சுப் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தப் பேச்சுப் போட்டிகள் ஆரம்ப பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடாத்தப்படுமெனவும் இவற்றில் பங்குகொள்ள விரும்பும் மாணவர்கள் மேலதிக விபரங்களை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ]41]

**எதிர்சாலம்**

கால தடைவிதித்தது ஏன்? இது என் மீது பழிவாங்கும் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட ஒன்றாகும் இதனைக் கட்சியின் தலைமைப் பீடமே திட்டமிட்டு மேற்கொண்டது.

''கட்சியின் விதிமுறைகளை மீறிய பலரை கட்சி இன்னும் பாதுகாத்து வருகிறது நான் பிரசாரத்திற்காக பதவியை ராஜினாமா செய்யவில்லை கட்சியிலிருந்து என்னை நீக்கிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட வேளையிலேயே நான் ராஜினாமா செய்தேன்.

''சென்ற ஜனாதிபதி தேர்தல் வேளையில் எனது தனிப்பட்ட தேவைக்காக விடுதலைப் புலிகளைச் சந்திக்க நான் செல்லவில்லை. கட்சியின் ஆலோசனையின் பேரிலேயே சென்றேன். அப்போது என்னுடன் மேதிலால்நேரு. குமார்பொன்னம்பலம் ஆகியோரும்கூடவந்தனர். எனவே கட்சியின் பெயரால் எனது தனிப்பட்ட பிரசாரத்திற்காக நான் அதனைச் செய்யவில்லை'' என்றார்.

தாக்கப்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சிறிலங்கா இந்தியாவிடம் ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த இரு நாட்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின் இந்திய வெளியுறவு செயலர் ஜே. என். டிக்ஷிற், சிறிலங்கா வெளியுறவு செயலர் பெர்னாட் திலகரட்ன ஆகியோர் நேற்று கூட்டாக புதுடில்லியில் இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர்

சிறிலங்கா கடற்படையால் இந்திய மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்து இரு நாடுகளும் தீவிரகவனம் செலுத்தி இதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதி

## பொதுக்கூட்டம்

(குருநகர்)

வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கயாழ் கிளையின் விசேட பொதுக்கூட்டம் 20ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்ற இருக்கின்றனர். (21)

## கிளை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்க அல்லைப்பிட்டி கிளை மானிப்பாய் வீதியில் இருந்து கே கே. எஸ். வீதியில் மேற்படி சங்க மக்கள் கடைக்கு அருகாமையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இக்கிளை மூலமே அல்லைப்பிட்டி மக்களிற்கான புரட்டாதி மாதத்திற்கான நான்கு வார உலர் உணவு தற்பொழுது விநியோகிக்கப்பட்டு வருகிறது. (88)

**முகத்துவாரம்**

சார் மேற்கொண்ட தேடுதலின்போதே இவை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

**திருமலை**

திருமலை மாவட்டத்தில் முதலிக்குளம், சாகரபுர, கும்புறுமூனை பகுதிகளில் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**யுத்தம்**

நடவடிக்கைகள் இடம்பெறும் என்றார்.

'யாழ்தேவி' நடவடிக்கை எமக்கு உணர்த்துவது என்னவெனில் கிளாலியை மட்டுமல்ல விடுதலைப் புலிகளின் வேண்டிய பகுதிகளை எம்மால் கைப்பற்றமுடியும் என்பதையே என்றார்.

ளது.

(யோ)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 16-10-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11254

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

28-4367, 28-1706, 26-3812, 41-9038, 27-9779, 28 3306, 26 2317, 27-7717, 42 3615, 42-9326, 26-0736, 24 9489 42-2862, 27-5045, 26-6461, 24-5912, 28 5484, 41-9895, 27-7822, 28-1020, 42-3419, 43 4045, 26-3177 27-8155, 24-6475, 41-2659, 26-2297, 26-8878, 27- 5912, 24-2545, 40 0770, 24-9938, 24-4265, 27-2107, 41-9663, 41 7297

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

27-9492, 26 4139, 24-5955, 27-2034, 24-1983, 41-8432, 27-5077, 24-3594, 28-9186, 41-9111, 26 2145, 40 7583, 28 3429, 41-7108, 42-3945, 43-2524, 24-4207, 24 4636, 27-3910, 24-8429, 41-5015, 28-2956, 26-4450.

## மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா வடிவாம்பிகை

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது 125/1 இர்ராசாவின் தோட்ட வீதியில் வசித்தவருமாகிய திருமதி கந்தையா-வடிவாம்பிகை நேற்று காலமாகி விட்டார். இவர் காலஞ் சென்ற வல்லிபுரம் பொன்னம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும், காலஞ் சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், ஞானதீபம், சகுந்தலா, சிவ ஒளி, மூர்த்தி (வர்த்தகர்), கோமதி, கலாமதி, நிலாமதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற மகாலிங்கம், வேதநாயகம், கேதாரநாதன் (வர்த்தகர்), மனோறஞ்ஜினி, பரமநாதன் (கணேசா வர்த்தக நிலையம் வட்டக்கச்சி), கருணாநிதி (குமரன் வர்த்தக நிலையம் யாழ்ப்பாணம்), கோணேஸ்வரன் (சிவா வர்த்தக நிலையம் பெருமாள் கோவிலடி) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ் சென்றவர்களான அமிர்தவல்லி கணபதிப்பிள்ளை, புவனேஸ்வரி-துரையப்பா,வாலாம்பிகை-அப்புத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், தம்பாப்பிள்ளையின் மைத்துனியும், பவளவல்லியின் சகலியும், மனோரஞ்சிதன் (நந்தா வர்த்தக நிலையம் யாழ்ப்பாணம்), மணிவண்ணன் (சுவிற்சலாந்து), மணிமாறன் (சரவணாஸ் வர்த்தக நிலையம் வட்டக்கச்சி)நந்தினி, வைகுந்தன், முகுந்தன், அரவிந்தன், சுதர்சன், செந்தூரன், நிரஞ்சன், ஜனகன், ஜனார்த்தனன், நிஜன், சாளினி சுஜீவன், றஜீவன், சுஜிதா, சஜிதா ,எழில்வேந்தன், எழில் அரசி, மகிழினி, மைதிலி, மகிந்தன், யுவராஜ் ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின்பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (17-10-93) 4 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மூர்த்தி
(மகன்)

125/1, இர்ராசாவின்தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.

(6314)